**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 5/2015**

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | PW.1 |
| NAME | அஜய் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 27.07.2026.

**2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. 1ம் பிரதிவாதி கோகிலாவிக்கு எதிராக அவர் உயிருடன் இருந்த காலத்தில் அவருக்கு எதிராக இந்த வழக்கில் ஒரு தலைபட்ச உத்தரவு வாங்கி உள்ளேன் என்றால் சரிதான். அந்த உத்தரவின் அடிப்டையில் நான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையான ஆவணங்கள் குறியிடு செய்யப்பட்டது என்றால் சரிதான். கடந்த 13.02.2015 அன்று ஒரு ஒருதலைபட்ச தீர்ப்பு வாங்கினேன் என்றால் சரிதான்.

2. 1ம் பிரதிவாதி கோகிலா அந்த ஒருதலைபட்ச தீர்ப்பை ரத்து செய்ய காலதாமத மனுவோடு தாக்கல் செய்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. விற்பனை ஒப்பந்தம் வா.சா.ஆ.1 ஆவணம் போடப்படுவதற்கு முன்பு வில்லங்கம் பார்த்தேனா என்றால் இல்லை. அந்த விற்பனை ஒப்பந்தத்தில் 1ம் பிரதிவாதி நானும் எனது வாரிசுகளும் விற்பனை ஒப்பந்தம் செய்து கொடுக்கிறோம் என வாசகம் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

3. இந்த வழக்கு கால தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியான நேரத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு சரியான வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. ஒருதலை பட்ச உத்தரவில் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலமும் ஆவணங்களும் நான் தாக்கல் செய்த கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் ஒரு அங்கமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல.

4. முதல் பிரமாண வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் பிரதிவாதிகள் 2 மற்றும் 3 ஐ கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு, பிரமாண வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்கள் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றாலும் அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH

Digitally signed by K KARTHICK ASATH
Date: 2026.07.27 20:22:33 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.